

தமிழகத்தில் உள்ள அரசு கல்லூரிகளில் கல்வி நிறுவனங்களுக்கான தேசிய தர நிர்ணய கட்டமைப்பின் மதிப்பீட்டு பட்டியலில் (NIRF) விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி 13 ஆவது இடத்தையும், இப்பட்டியலில் முதன் முறையாக இடம் பெற்றுள்ளதையும் தொடர்ந்து உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடியைச் சந்தித்து கல்லூரி முதல்வர் சிவக்குமார் தலைமையில் வாழ்த்துக்களை பெற்றனர்.



தேனி தெற்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் சின்னமனூர் தனியார் மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் மனோகரன் தலைமையில் நடந்தது. சின்னமனூர் நகரச் செயலாளர் முத்துக்குமார் வரவேற்புரையாற்றினார். தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் , மாநில தேர்தல் பணி குழு இணைச் செயலாளர் செல்வேந்திரன், மாநில தீர்மான குழு இணை செயலாளர் ஜெயக்குமார் , கொள்கை பரப்பு துணை செயலாளர் அம்பிகா பாண்டியன், நெசவாளர் அணி மாநில துணைச் செயலாளர் ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர் . மாநில பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், நல வாரிய உறுப்பினர் சூர்யா தங்கராஜ், பொதுக்குழு உறுப்பினர் தக்காளி அக்கிம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் ,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரகாஷ் ,அயலக அணி அமைப்பாளர் ரவி ,நகர மன்ற தலைவர் அய்யம்மாள்ராமு மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### நாளை (25ஆம் தேதி) காரைக்குடியில்

# சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை. ஆக. 24 -

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (25ஆம் தேதி) காரைக்குடியில் நடைபெறுகிறது. இது குறித்து சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. நாளை (25ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை) சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் உள்ள தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும்பொன் தா.கிருட்டிணன் அரங்கில் மாலை 4 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன் தலைமையில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

1 கழக தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில். 16ம்தேதி நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் பல்வேறு முடிவுகள் குறித்து .

2.வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்து.

3.கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை குறித்து.

4. கழக வளர்ச்சி பணிகள் . இந்த செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இன்று நடைபெறுகிறது!

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (24.8.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி - கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

மாவட்ட அவைத் தலைவர் ஜி.செல்வராஜ் தலைமை வகிக்கிறார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், கழக செயல் வீரர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

பொருள் : கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 16.08.2024 அன்று நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து

கழக வளர்ச்சிப் பணிகள்.

**அமைச்சர் பி.கீதாஜீவன்**
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

### மதுரை மாநகர் மாவட்டத்தில் - கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



மதுரை, ஆக. 24 -

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2025 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் செய்யப்படும் என்று அறிவித்துள்ளது.

2025ன் முன் திருத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக வாக்காளர்களை சரிபார்க்க அந்தந்த பகுதியில் உள்ள வாக்குசாவடி நிலை அலுவலர்கள் வீட்டுக்கு வீடு சரிபார்க்கும் பணி 20.08.2024 முதல் தொடங்கப்பட்டு 18.10.2024 வரை இந்தப்பணி நடைபெறுகிறது. வாக்குச்சாவடி அலுவலர்கள் ஒவ்வொரு வீட்டிலும் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களின் விவரங்களையும் சரிபார்ப்பர். 06.01.2025 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

எனவே 29.10.2024 முதல் 28.11.2024 வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்பும் தகுதியுள்ள குடிமக்கள் அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைத்தல், இடமாற்றம் செய்ய விரும்பும் வாக்காளர்கள் படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம்.

ஆகவே மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2) மற்றும் கழக உடன்பிறப்புகள் துரிதமாக செயல்பட்டு வாக்காளர்கள் சேர்த்தல் - சரிபார்த்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

மேற்கண்டவாறு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. மருத்துவ அணி துணைச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. மருத்துவ அணி துணைச் செயலாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட டாக்டர் செ.வல்லபன் அவர்கள், ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக,

**டாக்டர் ஆர்.கே. திலிப்குமார்**, எம்.பி.,பி.எஸ்., எம்.பி.ஏ.,
14, 6வது குறுக்குத் தெரு,
வள்ளுவர் கோட்டம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை
600 034. அவர்கள் **தி.மு.க. மருத்துவ அணி துணைச் செயலாளராக தலைமைக் கழகத்தால்** நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில மருத்துவ அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

# மாவட்ட நிர்வாகிகள் நியமனம்!

## சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணி தலைவராக நியமிக்கப்பட்ட எம்.எஸ்.அக்பர்அலி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **எம்.ஏ.எம். இம்தியாஸ்** (சின்னையா செட்டியார் வீதி, கீரனூர், புதுக்கோட்டை மாவட்டம் - 622 502) அவர்கள் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுதலைவராக நியமிக்கப்படுகிறார்.

**இராமநாதபுரம் மாவட்டம்**

இராமநாதபுரம் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணி துணைத் தலைவராக திரு. **செ.முகம்மது இக்பால்**, (10/11, கோசுராவுத்தர் தெரு, முதுகுளத்தூர், இராமநாதபுரம் மாவட்டம் - 623 704) அவர்களும்;

மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுதுணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட மு. அப்துல்ஜலில் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **செ.இஸ்ஹாக்**, (9/131, தெற்குத் தெரு, ஏர்வாடி, இராமநாதபுரம் மாவட்டம் - 623 515) அவர்கள் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுதுணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அணி நிர்வாகிகளுடன் இணைந்து இவர்கள் கழகப் பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.08.2024

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்,
தி.மு.க. சிறுபான்மையினர்
நல உரிமைப்பிரிவு

### பொன்னம்பல அடிகளார் சிறப்புரை!

# குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு விழா! அன்னதானக் கூடம் திறப்பு!

## 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' நூல் வெளியீடு!

சிவகங்கை, ஆக. 24-

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் குன்றக்குடி மடத்தின் 699 மகா குரு பூஜை மற்றும் 45வது அடிகளாரின் நூற்றாண்டினை முன்னிட்டு ரூபாய் 45 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்ட அன்னதான கூடம் திறப்பு விழா , தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் எழுதிய மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழா குன்றக்குடியில் மதுரை ஆதீனம் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் கிருங்கை சேதுபதி வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற நீதிபதி மெ. சொக்கலிங்கம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் எழுதிய 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற நூலை வெளியிட்டார்.

இந்த விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசியதாவது:

இன்று நமது மடத்தின் 699 வது ஆண்டு மகா குரு பூஜை நடைபெறுகிறது. ஆன்மீகம் என்பது மக்களுக்காக தான்.என்று முந்தைய 45வது குருமகா சன்னிதானம் குன்றக்குடி அடிகளார் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட தவத்திரு அடிகளார் அவர்கள் கூறுவார்கள். ஆன்மீகத்துடன் மனிதர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று தனது கடைசிவாழ் நாள் வரை வலியுறுத்தி அதற்காக பாடுபட்டு வந்தார். அதற்காக அயராது பணியாற்றினார். இறைவனின் படைப்பில் எது வலிமை வாய்ந்தது என்று கேட்டால் தேடிச் சென்று உதவுகிறார்களே அவர்கள் தான் வலிமை படைத்தவர்கள் என்று அடிகளார் அவர்கள் கூறியுள்ளார்கள்.

துறவற வாழ்க்கை என்பது மக்கள் நலமாக அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும். வாழ்க்கை வாழ்வதற்கு பொருள் மட்டும் தேவையில்லை. நல்ல சிந்தனை நல்ல எண்ணங்கள் இருந்திட வேண்டும். அவமானத்தையும் துரோகத்தையும் தாங்குவதுதான் துறவிகளின் துறவு வாழ்க்கையாகும். அதுதான் உண்மையான துறவுமாகும். 45வது குன்றக்குடி அடிகளார் அவர்கள் இன்று உலக அளவில் அனைவர் மனத்திலும் நிலைத்து நிற்கிறார் என்றால் அவர் தமிழ் மக்களுக்காகவும் தமிழ் மொழிக்காகவும்அனைத்து மக்கள் ஒற்றுமையுடன் வாழ அவர் ஆற்றிய அயராத பணி தான் காரணமாகும். அவர் வழியில் தொடர்ந்து குன்றக்குடி ஆதீன மடம் ஆன்மீகப் பணியும் தமிழ் பணியும் இணைந்து ஒன்றாக தொடர்ந்து பணியாற்றும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசினார்.



தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற பழைய குற்றாலம் அருவியை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் நேரில் பார்வையிட்டு, அங்கு #ECOTourism சூழல் சுற்றுலா சார்ந்த கட்டமைப்புகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகளை அமைப்பது தொடர்பாகவும், துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். உடன் தென்காசி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஜெயபாலன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கொத்தமங்கலம், டி.எஸ்.ஆர். மண்டபத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். உடன் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.